# பார் போற்றும் பெண்ணுலகு

## தொகுதி - I


பதிப்பாசிரியர்கள்

முனைவர் த. கலாஸ்ரீதர்

முனைவர் செ. கற்பகம்

முனைவர் பி.தீபா

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்



அனன்யா

8/37, பி.ஏ.ஒய். நகர்,

குழந்தை இயேசு கோவில் அருகில்,

புதுக்கோட்டை சாலை,

தஞ்சாவூர் - 613 005.

பார் போற்றும் பெண்ணுலகு

© முனைவர் த.கலாஸ்ரீதர முனைவர் செ.கற்பகம் முனைவர் பி. தீபா

முதற்பதிப்பு : மார்ச் 2018

வெளியீடு : அனன்யா<br>8/37, பி.ஏ.ஒய். நகர்,<br>குழந்தை இயேசு கோவில் அருகில்,<br>புதுக்கோட்டை சாலை,<br>தஞ்சாவூர் - 613 005.

ஒளி அச்சு & அச்சாக்கம் : அருள் ஆப்செட்,<br>தஞ்சாவூர் - 613 005.

நூல் அளவு : டெம்மி

தாள் வகை : Maplitho

பக்கங்கள் : xvi+688

விலை : ரூ.500/-

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Par Potrum Pennulagu |
| Subject | : | Essays |
| Editors | : | Kalasridhar, Karpagam, Deepa |
| Language | : | Tamil |
| Edition | : | 1st Edition March 2018 |
| Size of the Book | : | Demy |
| Paper | : | Maplitho |
| Number of Pages | : | xvi +688 |
| Printed at | : | Arul Offset, Thanjavur. |
| Publishers | : | Ananya<br>8/37, P.A.Y. Nagar,<br>Near Infant Jesus Church,<br>Pudukkottai Road,<br>Thanjavur - 613 005. |
| Cell | : | 9442346504 |
| Email | : | ananya.arul@gmail.com |
| Price | : | Rs.500/- |
| ISBN | : | 978-81-928616-9-2 |

# க.ச.கனகசிங்கத்தின் இசை முத்துக்கள், செந்தில்நாதனின் கீர்த்தனை மாலை, ஈழத்து இசை – ஓர் ஒப்பீடு.

திருமதி கிருபாசக்தி கருணா,
தலைவர்,
சிரேஸ்ட விரிவுரையாளர்,
இசைத்துறை,
யாழ்ப் பல்கலைக்கழகம்,
இலங்கை

## 1.0 அறிமுகம்:

கர்நாடக இசையின் இருகண்களாக விளங்குபவை கல்பித சங்கீதமும் மனோதர்ம சங்கீதமும் ஆகும். குல்ரித சங்கீதம் என்பது இசைவல்லுனரால் முன்னரே இயற்றப்பட்ட அனைத்து வகை உருப்படிகளையும் குறிக்கும். ஆரம்பப் பாடங்களான வரிசைகள் உட்பட கீதம், ஸ்வரஜதி, வர்ணம், கீர்த்தனை, பதம், தில்லானா போன்ற அனைத்து வகை உருப்படிகளும் கல்ப்பித இசையைச் சேர்ந்தவை. மனோதர்ம இசையில் இராக ஆலாபனை, நிரவல், கற்பனாஸ்வரம், தானம் ஆகியன இடம்பெறும். இந்தஇசை அவரவர் பயிற்சிக்கேற்பவும், வித்துவத்திற்கேற்பவும் தத்தமது கற்பனையில் பாடப்படுகிறது. மேற்கூறிய கல்ப்பித இசையில் வர்ணத்தின் பின்னர் கீர்த்தனை கற்பிக்கப்படுகிறது. மனோதர்மத்திற்குரிய முக்கிய தளமாக இக்கீர்த்தனை வகை காணப்படுவதால் இசை அரங்குகளில் முக்கிய இடத்தை இது வகிக்கிறது.

தென்னிந்தய வாக்கேயகாரர்களால் இயற்றப்பட்ட ஏராளமான கீர்த்தனைகளே இன்று இசையுலகில் பயன்பாட்டில் காணப்பட்டாலும் ஈழத்திலும் பல மகான்கள் தமிழில் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்கள். அந்த விதத்தில் ஆறுமுக நாவலர், பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர், அருட்கவி விநாசித்தம்பி ஐயா, ச.முருகையா. க.ச.கனகசிங்கம், திரு.செந்தில்நாதன். திலகநாயகம் போல், ச.பாலசிங்கம், அ.கி.ஏரம்பமூர்த்தி,

சரஸ்கலாமணி, சிவயோக சுவாமிகள், சி.கணபதிப்பிள்ளை (அண்ணாவியார்), ப. சிவானந்த சர்மா, சோ.செல்லையாக் குருக்கள், சோ.பத்மநாதன் ஆகியோருடைய கீர்த்தனைகள் சிறப்பானவை. இவற்றில் செந்தில்நாதன், க.ச. கனகசிங்கம் ஆகியோரின் கீர்த்தனைகள் மட்டும் இந்த ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. கனகசிங்கம் சுரதாளக் குறிப்புக்களுடன் பிரபலமான கீரத்தனைகளை இசைமுத்துக்கள் என்ற நூலில் தொகுத்ததுடன் தன்னுடைய சொந்தக் கீரத்தனைகள் பன்னிரண்டை சுரதாளக் குறியீட்டுகளுடன் வெளியிட்டுள்ளார். செந்தில்நாதன் கீர்த்தனை மாலை என்ற நூலில் தன்னுடைய சொந்தக் கீரத்தனைகள் இருபத்தொன்றை சுரதாளக் குறியீட்டுக்களுடன் வெளியிட்டுள்ளார்.

செந்தில்நாதனின் கீர்த்தனைமாலை முதலாம் பாகமும் ச.கனகசிங்கம் அவர்களின் இசைமுத்துக்கள் என்ற Ńலும் வ்ஆய்விற்கான மூலங்களாகக் கொள்ளப்பட்டு ஒப்பீட்டு ஆய்வுமுறையியல் மூலம் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

விவரிப்பு:

**1. நூல் ஆசிரியர்களின் இசைப்புலமை:**

முறையாக இசை பயின்ற இருவருமே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். வருமானவரி அதிகாரியாக இருந்த க.ச.கனகசிங்கம் எர்ணாகுளம் அந்தோனி பாகவதரிடமும், இலங்கையிலும் இங்கிலாந்திலும் 14 வருடங்கள் கணித ஆசிரியராகப் பணி புரிந்து பின்னர் முப்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு மேலாக வழக்கறிஞராகப் பணி புரிந்த செந்தில்நாதன் புத்துவாட்டி சோமசுந்தரம் அவர்களிடமும் இசைப் பயின்றவர்கள். செந்தில்நாதன், வித்வான் எம்.ஏ.கல்யாணகிருஸ்ண பாகவதர் மற்றும் மஹாராஜபுரம் வி.சந்தானம் ஆகியோரிடமும் பயிற்சி பெற்றார்.

கனகசிங்கம் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் கௌரவ செயலாளராக இருந்து பல இசை விழாக்களையும் இசைப்

போட்டிகளையும் நடத்தியவர். பதுளை நகரில் கலாலயம் என்ற மன்றத்தை உருவாக்கியவர். செந்தில்நாதன் பல அறிஞர்களுடன் இணைந்து யாழ்நுண்கலைமன்றம் என்ற ஒரு சபையைத் தாபித்து ஒவ்வொரு மாதமும் ஒரு முழுநேர இசைநிகழ்வை வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தியவர். அத்துடன் பல்லவி என்ற இசை, நடன சஞ்சிகையை ஆரம்பித்து அதன் நிர்வாக ஆசிரியராக இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தவர்.

**2. நூல் வெளியீடு:**

இசைமுத்துக்கள் 1989ஆம் ஆண்டு வடபழனி சென்னையில் வெளியிடப்பட்டுள்ளது. கீர்த்தனைமாலையும் 2000ஆம் ஆண்டு வடபழனி சென்னையில் வெளியிடப்பட்டுள்ளது

**3. நூல் உள்ளடக்கம்:**

இசைமுத்துக்களுக்கு கலைமாமணி எம். எஸ் அனந்தராமன் சங்கீத கலாநிதி. பி.ராஜம் ஐயர், பத்மஸ்ரீ கே. ஜே. ஜேசுதாஸ் ஆகிய இசை அறிஞர்களும் கீர்த்தனைமாலைக்கு சங்கீதகலாநிதி செம்மங்குடி ரா.ஸ்ரீநிவாசய்யர், டி.கே.பட்டம்மாள், தஞ்சாவூர் எம்.தியாகராஜன் ஆகிய பேரறிஞர்களும் வழங்கிய வாழ்த்துச் செய்திகள் காணப்படுகின்றன.

இசைமுத்துக்கள் என்ற நூலில் ஆசிரியர் சங்கீத மும்மூர்த்திகள், தமிழிசை மும்மூர்த்திகள் ஆகியோரின் பிரபல்யமான கீர்த்தனைகள் பதினான்குடன் தனது சொந்த சாகித்தியங்களான பன்னிரண்டு கீர்த்தனைகளையும் ஏழு தேவாரங்களையும் சுரசாகித்தியமாக வெளியிட்டுள்ளார்.

கீர்த்தனை மாலை என்ற நூலில் ஆசிரியர் கீர்த்தனை மாலை என்ற நூலில் இருபத்தியொரு சொந்தக் கீர்த்தனைகளை சுர சாகித்தியமாக வெளியிட்டுள்ளார்.

4. **கீர்த்தனைகள் பற்றிய ஒப்பீடு:**

இந்தப் பகுதிக்காக இருவரது சொந்தக் கீர்த்தனைகள் மட்டும் எடுக்கப்பட்டுள்ளன.

4.1. இசைமுத்துக்கள்:

4.1.1. சிந்தையெலாம் அள்ளும்.....

இக்கீர்த்தனை பிருந்தாவனசாரங்கா இராகத்திலும் ஆதி தாளத்திலும் அமைந்துள்ளது. இக்கீர்த்தனை முருகனின் ஆறுடை வீடுகளில் ஒன்றான பொலிகைசேரில் அமைந்த “கந்தவனம்” எனும் கோயில் மேல் பாடப்பெற்றது. கந்தவனக் கந்தனின் அழகு, தலவிருட்சமான வன்னிமரத்தின் சிறப்பு, இவ் ஆலயத்தின் சிறப்புக்களான தேர், சூரசம்காரம் ஆகியன கூறப்பட்டுள்ளது.

4.1.2. தாயே பைரவி........

இக்கீர்த்தனை பைரவி இராகத்திலும் ரூபக தாளத்திலும் அமைந்துள்ளது. இக்கீர்த்தனையில் தேவியின் சிறப்புக்களைக் கூறித் தன்னை ஆதரிக்கும்படி பாடுகின்றார்.

4.1.3. உன்அருள் நிதி.....

இக்கீர்த்தனை வலஜி இராகத்திலும் ஆதி தாளத்திலும் அமைந்துள்ளது. இக்கீர்த்தனை முருகனின் ஈழத்து ஆறுபடை வீடுகளில் ஒன்றான தொண்டைமானாற்றின் கரையில் அமைந்த செல்வச்சந்நிதி எனும் கோயில் மேல் பாடப்பெற்றது. இதில் முருகப்பெருமானின் அருள் வேண்டி பாடப்பட்டுள்ளது.

4.1.4. தந்திடுவாய் நல்ல.....

இக்கீர்த்தனை கல்யாணி இராகத்திலும் ஆதி தாளத்திலும் அமைந்துள்ளது. இக்கீர்த்தனை நல்ல கலைகளைத் தரும்படி அம்பாளை வேண்டுவதாக அமைந்துள்ளது.

4.1.5. குன்றம் ஒன்று கண்டால்.....

இக்கீர்த்தனை நவரசகன்னட இராகத்திலும் ஆதி தாளத்திலும் அமைந்துள்ளது. இக்கீர்த்தனை முருகனின் அழகைக் காண ஏங்குவதாக அமைந்துள்ளது.

4.1.6. உள்ளமே பெருங்கோயில்.....

இக்கீர்த்தனை நாட்டைக்குறிஞ்சி இராகத்திலும் ஆதி தாளத்திலும் அமைந்துள்ளது. இக்கீர்த்தனை மனத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என வலியுறுத்துகிறது.

4.1.7.சிவனே இவனை......

இக்கீர்த்தனை சகானா இராகத்திலும் ஆதி தாளத்திலும் அமைந்துள்ளது. இக்கீர்த்தனை சிவனின் அருள் வேண்டிப் பாடப்பட்டுள்ளது.

4.1.8. அன்பர்க்கு அன்பன்.....

இக்கீர்த்தனை அமீர்கல்யாணி இராகத்திலும் திஸ்ர ஏக தாளத்திலும் அமைந்துள்ளது. இக்கீர்த்தனையில் சபரிமலை ஐயப்பனின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.

4.1.9.பார்வதி தேவி.......

இக்கீர்த்தனை பேகடை இராகத்திலும் ருபக தாளத்திலும் அமைந்துள்ளது. இக்கீர்த்தனை பார்வதிதேவி தன்னை காத்தரு வேண்டிப் பாடப்பட்டுள்ளது. இக்கீர்த்தனையில் சிட்டைஸ் சாகியத்துடன் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பானது.

4.1.10. வேணுகானஒலி........

இக்கீர்த்தனை யமுனாகல்யாணி இராகத்திலும் ஆதி தாளத்திலும் அமைந்துள்ளது. இக்கீர்த்தனை கண்ணனைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது.

4.1.11. விடமாட்டேன்......

இக்கீர்த்தனை தேஸ் இராகத்திலும் ஆதி(திஸ்ரகதி) தாளத்திலும் அமைந்துள்ளது. இக்கீர்த்தனை பார்வதிதேவி தன்னை காத்தருள வேண்டிப் பாடப்பட்டுள்ளது. இக்கீர்த்தனையில் சிட்டைஸ்வரம் சாகியத்துடன் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பானது.

4.1.12. அன்னையே பைரவி.......

இது ஒரு நவராகமாலிகைக் கீர்த்தனையாகக் காணப்படுகிறது. இதில் பைரவி, சிந்துபைரவி, அமிர்தவர்சினி, சாமா, நித்யகல்யாணி. அமீர்கல்யாணி, பூர்விகல்யாணி. யமுனாகல்யாணி, ஆனந்தபைரவி ஆகிய இராகங்கள் இடம்பெற்றுள்ளன.

## 4.2. கீர்த்தனைமாலை:

### 4.2.1. பொருள்:

செந்தில்நாதனின் கீர்த்தனைகளின் சாகித்தியம் நல்நூர்க்கந்தன், கதிர்காமக்கந்தன், சந்நிதிமுருகன், திருக்கேதீஸ்வரர், திருக்கோணேஸ்வரர், வண்ணை வைத்தீஸ்வரர், வண்ணை வெங்கடேஸ்வரர், நயினைநாகபூ'ணி அம்பாள், தெல்லிப்பளைத் துர்க்கை அம்பாள், மதுராபதி பத்ரகாளி அம்பாள், தெகிவளை மகாவி'ஷ்ணு மூர்த்தி, சாந்தையர் மடம் ஆகிய ஆலயத் தெய்வங்கள் மீது பாடப்பட்டுள்ளது.

### 4.2.2. இராகம்:

ஹம்சத்வனி, பிலகரி, கல்யாணி, தோடி, காம்போதி, சிம்மேந்திரமத்திமம், கானடா, சண்முகப்பரியா, கரகரப்பிரியா, ஆனந்தபைரவி, ரீதிகௌளை, ஆரபி, சகானா, கிந்தோளம், ஆபேரி, சரஸ்வதி, ஹம்சநாதம், குந்தலவராளி, நவரஸ கன்னட, பெகாக், கமாஸ் ஆகிய இருபத்தொரு இராகங்களில் கீர்த்தனைகள் இடம்பெற்றுள்ளன.

### 4.2.3. தாளங்கள்:

ஆதி,மிஸ்ரசாபு,ரூபகம் ஆகியவற்றில் இக்கீர்த்தனைகள் இடம் பெற்றுள்ளன.

### 4.2.4. சுரஅமைப்பு:

பெரும்பான்மையான கீர்த்தனைகளின் சுரஅமைப்பு பிரபல்யமான தெலுங்கு, சமஸ்கிருதக் கீரத்தனைகளின் அமைப்பைப் பின்பற்றியுள்ளது என ஆசிரியரே குறிப்பிட்டுள்ளார்.

4.2.5. எடுப்பு: இக்கீர்த்தனைகளின் எடுப்புக்களாக சமம், அரை இடம், முக்கால் இடம், ஒன்றரை இடம் ஆகியன இடம்பெறுவது சிறப்பானது.

## 5. முடிவுரை:

5.1. இசைஆர்வம் உள்ள இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாயினும் ஒழுங்கான இசைக்கல்வியும் சிறந்த தேடலும் Áலாக்கத்திற்கு வழிசமைத்துள்ளது.

5.2. இவர்களுடைய கீர்த்தனைகளில் வக்ர பாசாங்க இராகங்களும் இடம்பெற்றுள்ளமை இவர்களுடைய இசைஞானத்திற்கு இன்னும் வலுச்சேர்க்கினறது.

5.3. அனைத்துக் கீர்த்தனைகளும் சுரஅமைப்புடன் காணப்படுவதும் அறிமுகமான பிறமொழிக் கீர்த்தனைகளி மெட்டில் சில அமைந்திருப்பதும் இசையாளர்களின் பயன்பாட்டிற்குப் பெரிதும் உதவுவதாக உள்ளன.

5.4. ஈழத்து முக்கிய ஆலயங்கள் மீது இருவராலும் பாடப்பட்டுள்ள கீர்த்தனைகள் இசைக்கலைஞர்களால் பாடிப் பிரபல்யப்படுத்துவது இவ் ஆய்வின் அடுத்த நகர்விற்குரிய பரிந்துரையாகும்

## துணை நூல்கள்:


1. செந்தில்நாதன்.W.S, (2000), கீர்த்தனை மாலை, வடபழனி, சென்னை.
2. கனகசிங்கம்.க.ச,(1989), இசைமுத்துக்கள், இசை நிலையம், சென்னை.